பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**22 08 2026 SATURDAY 7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** நாட்டின் புத்த பாரம்பரியம் உலக அளவில் பெருமை சேர்ப்பதாக மத்திய அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

**2.** வந்தேமாதரம் தேசியப் பாடலின் கௌரவத்தை பாதுகாப்பது தொடர்பான தீர்மானம் புதுதில்லியில் நடைபெற்ற பிஜேபி கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

**3.** உச்சநீதிமன்றத்தில் நடைபெற்றுவரும் லோக் அதாலத் நிகழ்ச்சியின் முதல் நாளில் 400-க்கும் மேற்பட்ட வழக்குகளுக்கு சமரச தீர்வு காணப்பட்டுள்ளது.

**4.** இந்தியாவிலிருந்து இலங்கை அகதிகள் திரும்ப, இலங்கை அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை ஐ நா வரவேற்றுள்ளது.

**5.** கனடாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பல்வேறு பொருட்களுக்கு 50 சதவீத வரியை அமெரிக்கா விதித்துள்ளது.

இனி விரிவான செய்திகள்---

<<<<<<>>>>>>

நாட்டின் புத்த பாரம்பரியம் உலக அளவில் பெருமை சேர்ப்பதாக மத்திய இளையோர் விவகாரங்கள்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினத்தில் பிரிக்ஸ் இளையோர் விவகார அமைச்சர்களின் மாநாட்டின் ஒரு பகுதியாக **Thotlakonda** புத்த பாரம்பரிய தளத்தை பார்வையிட்டபின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் புத்த பிட்சுக்கள் அங்கு வழிபாடு நடத்தியதாக கூறினார்.

அன்னையின் பெயரில் மரக்கன்று நடும் இயக்கத்தின்கீழ், மத்திய அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா, மரக்கன்று நட்டார்.

<<<<<<>>>>>>

**Gorkha** மலைப்பகுதி பிரச்சினைக்கு தீர்வுகாண உயர்மட்டக்குழு அமைக்கப்படும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

சிலிகுரியில் திரு அமித் ஷா தலைமையில், மூத்த **Gorkha** தலைவர்களின் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மேற்குவங்க மாநில தலைமைச்செயலர் திரு மனோஜ் அகர்வால், புலனாய்வு அமைப்பு இயக்குநர் மகேஷ் தீக்ஷித், மாநில அமைச்சர் திரு **Bishal Lama** உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்திற்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய டார்ஜிலிங் மக்களவை உறுப்பினர் திரு **Raju Bista** இந்த கூட்டம் ஆக்கப்பூர்வமாக அமைந்துள்ளதாக தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

வந்தேமாதரம் தேசியப் பாடலின் கௌரவத்தை பாதுகாப்பது தொடர்பான தீர்மானம் புதுதில்லியில் பிஜேபி கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

இதுதொடர்பாக பிஜேபி தலைவர் திரு. நிதின் நபின் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், வந்தேமாதரம் பாடலின் முதல் இரண்டு சரணங்கள் மட்டும் பாடப்படும் என்ற காங்கிரஸ் செயற்குழுவின் தீர்மானத்திற்கு கண்டனம் தெரிவிப்பதாக கூறியுள்ளார்.

வந்தேமாதரம் பாடலின் வரலாற்று முக்கியத்துவம் குறித்து, நாடுமுழுவதும் விழிப்புணர்வு ஏற்படுத்தப் போவதாக அவர் தெரிவித்தார்.

புதுதில்லியில், புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட கட்சியின் நிர்வாகிகள் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

<<<<<<>>>>>>

உச்சநீதிமன்றத்தில் நடைபெற்றுவரும் மூன்று நாள் லோக் அதாலத் நிகழ்ச்சியில், முதல் நாளில் 400-க்கும் மேற்பட்ட வழக்குகளுக்கு சமரச தீர்வு காணப்பட்டுள்ளது.

விவாகரத்து தொடர்பான வழக்குகள், சொத்து வழக்குகள், வாகன விபத்து, இழப்பீடு, நிலம் கையப்படுத்துதல், வரி பிரச்சினைகள், தொழிலாளர் மற்றும் சேவை தொடர்பான வழக்குகளுக்கு இதன் மூலம் தீர்வுகாணப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கையை குறைக்கும் நோக்கிலும், ஒருமித்த கருத்தின் அடிப்படையில் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் வகையிலும் இந்த லோக் அதாலத் முகாம்கள் நடத்தப்படுவதாக உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது.

நேற்று தொடங்கிய லோக் அதாலத் முகாமில் 16 சிறப்பு அமர்வுகள் அமைக்கப்பட்டு 600-க்கும் மேற்பட்ட வழக்குகள் பட்டியலிடப்பட்டுள்ளன.

ஒவ்வொரு அமர்விலும் உச்சநீதிமன்றத்தின் இரண்டு நீதிபதிகள் முன்னிலையில் வழங்குகளுக்கு சுமூக தீர்வுகாணப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

பஞ்சாபில் முதன்முறையாக நவீன ட்ரோன்களுடன் கூடிய **Baaz** பட்டாலியனை இந்திய ராணுவம் தொடங்கியுள்ளது.

எல்லைப்பகுதியை கண்காணிப்பற்கு இந்த ட்ரோன்கள் பயன்படுத்தப்படும்.

இந்திய ராணுவத்தின் **Vajra** பிரிவின் கீழ், இது செயல்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியாவை **2047-**ஆம் ஆண்டுக்குள் உருவாக்கும் முயற்சிக்கு இளைஞர்கள் முக்கிய பங்காற்ற வேண்டும் என்று கோவா முதலமைச்சர் திரு பிரமோத் சாவந்த் கூறியுள்ளார்.

ஆந்திரப்பிரதேச மாநிலம் விஜயவாடாவில் நடைபெற்ற வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்கும் பணியில் இளைஞர்கள் என்ற தலைப்பிலான கலந்துரையாடல் நிகழ்ச்சியில் பங்கேற்ற அவர், மக்கள் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் முயற்சியில் இளைஞர்கள் ஈடுபட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

கொள்கை முடிவு எடுப்பவர்களாகவும், அடிப்படை மக்கள் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பவர்களாகவும், சமூக தொழில்

முனைவோராகவும், தொழில்நுட்ப வல்லுநர்களாகவும் இளைஞர்கள் தங்களை மேம்படுத்திக்கொள்ள வேண்டும் என்று அவர் கூறினார்.

மக்களை மையமாக கொண்ட கலாச்சாரத்தின் அடிப்படையில், அரசியல் இருக்க வேண்டும் என்றும், பொதுமக்கள் பங்கேற்புடனும், வெளிப்படைத் தன்மையுடனும், நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய அரசு நிர்வாகத்துடனம் செயல்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

அடிப்படை மாற்றங்களை கொண்டுவருவதிலும், பொது தலங்களில் விழிப்புணர்வு ஏற்படுத்தவும் இளைஞர்கள் முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்று அவர்கூறினார்.

நாட்டின் எதிர்காலத்தை கருத்தில்கொண்டு இளைஞர்கள் அக்கப்பூர்வமாக செயலாற்ற வேண்டும் என்றும் திரு பிரமோத் சாவந்த் கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>>>

இந்தியாவிலிருந்து இலங்கை அகதிகள் திரும்ப, இலங்கை அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை ஐ நா வரவேற்றுள்ளது.

இதுதொடர்பாக ஐ நா வெளியிட்டுள்ள அறிக்கையில், இலங்கை அகதிகள் தாய்நாட்டிற்கு திரும்புவதற்கான நெறிமுறைகளை எளிதாக்க மேற்கொண்ட நடவடிக்கைகளை பாராட்டியுள்ளது.

தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகள், இலங்கை திரும்புவதற்கு அந்நாட்டு அரசு சிறப்பு ஏற்பாடுகளை இம்மாதம் செய்திருந்தது.

<<<<<<>>>>>>

கனடாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பல்வேறு பொருட்களுக்கு 50 சதவீத வரியை அமெரிக்கா விதித்துள்ளது.

இதற்கு பதிலடியாக, அமெரிக்க பொருட்களுக்கு வரி விதிக்கப்படும் என்று கனடா பிரதமர் திரு. **Mark Carney** தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் ஹாக்கி மட்டைகள் உள்ளிட்ட பல்வேறு பொருட்களுக்கு வரி விதிக்கப்பட்டுள்ளது.

எஃகு, அலுமினியம், வாகனங்கள் உள்ளிட்ட பல்வேறு பொருட்களுக்கு வரிச்சலுகை அளிக்க வேண்டும் என்று கனடா வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக இருநாடுகளுக்கு இடையே பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதாகவும் கனடா கூறியுள்ளது.

<<<<<<>>>>>>

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாண சட்டமன்றத்தில் நவம்பர் **8-**ஆம் தேதி தீபாவளி பண்டிகையை கொண்டாடுவதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்த தீர்மானத்தில் தீபாவளி பண்டிகயை அனைத்துத் தரப்பு மக்களும் இணைந்து கொண்டாட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவாழ் இந்தியர்கள் மற்றும் இந்திய வம்சாவளியினரின் கோரிக்கையை ஏற்று தீபாவளி பண்டிகையை கொண்டாடுவதென தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீமையை நன்மை வென்றதன் அடையாளமாக தீபாவளி பண்டிகை கொண்டாடப்படுவதாகவும், சவால்களை எதிர்கொண்டு வெற்றிபெறுவது, நேர்மறையான சிந்தனை, மனிதநேயம், இரக்க குணம் ஆகியவற்றை வெளிப்படுத்தும் வகையிலும் இப்பண்டிகை அமைந்துள்ளதாக தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

முன்னதாக, அமெரிக்காவில் உள்ள **Delawara, Newyork, New Jersey, Massachusetts** ஆகிய மாகாணங்கள் இந்தியாவின் சுதந்திர தினத்தை ஆகஸ்ட் **15-**ஆம் தேதியன்று இந்தியா தினமாக கொண்டாடுவதற்கான பிரகடனத்தை அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

<<<<<<>>>>>>

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு ஜம்மு காஷ்மீரில் அந்நாட்டு ராணுவ தாக்குதலில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்று பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐ நா-விடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஐ நா பொதுச்செயலாளர் திரு அன்டோனியோ குட்ரஸூக்கு, பிரிட்டனின் 70 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனுப்பியுள்ள கடிதத்தில் பாகிஸ்தான் ராணுவ தாக்குதலால் அப்பாவி பொதுமக்கள் அடக்குமுறைக்கு உள்ளாவதாகவும் ராணுவத்தின் கடுமையான தாக்குதலில் பலர் காயமடைந்திருப்பதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த பகுதியில் தகவல் தொடர்பு முற்றிலுமாக முடக்கப்பட்டுள்ளதாகவும், மக்களுக்கான அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அப்பகுதியில் அமைதியை நிலைநாட்டவும், மக்கள் சிரமமின்றி தங்கள் பணிகளை மேற்கொள்ளவும் வழி ஏற்பட வேண்டும் என்று அதில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

பொதுமக்களை ராணுவம் தன்னிச்சையாக கைது செய்யும் நடவடிக்கைகளை நிறுத்துவதற்கும் ஐ நா தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பிரிட்டனின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

<<<<<<>>>>>>

கிழக்கு மத்தியப்பிரதேசத்தில் அடுத்த 24 மணிநேரத்தில் மிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

தில்லி, ஹரியானா, சண்டிகர், பஞ்சாப், இமாச்சலப்பிரதேசம், ஜம்மு காஷ்மீர், லடாக் ஆகிய பகுதிகளில் கனமழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பீகார், சட்டீஸ்கர், ஒடிஷா, மேற்குவங்கம், உத்தராகண்ட் மற்றும் வடகிழக்கு மாநிலங்களில் அடுத்த மூன்று நாட்களுக்கு கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆந்திரப்பிரதேசம், கர்நாடகம், தமிழகம், புதுச்சேரி மற்றும் கரைக்கால் கடலோரப் பகுதிகளில் நாளை வரை இடி மின்னலோடு சூறைக்காற்றுடன் மழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக் கோப்பை ஹாக்கிப் போட்டியின் ஆடவர் பிரிவில் இந்தியா - நெதர்லாந்து இடையேயான ஆட்டம், நெதர்லாந்தின் **Amstelveen**-ல் இன்னும் சற்றுநேரத்தில் தொடங்குகிறது.

------------------

தமிழ்நாடு பிரிமீயர் லீக் கிரிக்கெட் போட்டியில் சேலம் அணி **45** ரன் வித்தியாசத்தில் திருப்பூர் அணியை வென்றது.

சென்னையில் இன்று நடைபெற்ற இப்போட்டியில், முதலில் விளையாடிய சேலம் அணி நிர்ணயிக்கப்பட்ட **20** ஓவரில் **8** விக்கெட் இழப்பிற்கு **169** ரன் எடுத்தது.

**170** ரன் என்ற வெற்றி இலக்குடன் பின்னர் விளையாடிய திருப்பூர் அணி நிர்ணயிக்கப்பட்ட **20** ஓவரில் **9** விக்கெட் இழப்பிற்கு **124** ரன் மட்டுமே எடுத்தது.

**<<<<<<END>>>>>>**